[1981 மார்ச் 31

அலுவலகம் என்பது அரசின் துறையாக சில இடங்களில் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தன்னுடைய உணவு விடுதிகளை அல்லது ஓய்வு கூடங்களை அமைக்கின்ற அந்த அடிப்படை, அந்த பகுதி சுற்றுலா பயணிகள் வருகிற எண்ணிக்கையை ஒட்டியும், அந்த பகுதி சுற்றுலா முக்கியத்துவத்திலே எந்த அளவு இடம் பெற்றிருக்கிறது என்பதையும் பார்த்து இப்படிப்பட்ட சுற்றுலா விடுதிகள் கட்டப்படுகிறது; அதனுடைய வரவு செலவுத் திட்டத்திலே ஆண்டு இறுதியிலே கையை கடிக்காமல் இருக்குமா என்பதையும் மனதிலே வைத்துதான் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா விடுதிகளை, உணவு விடுதிகளை அமைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிமாநகரதில் ஆயிரக்கணக்கான கோவில்கள் இருப்பதாக சொல்கின்றார்கள். அங்கு தான் அண்ணா அவர்கள் தோன்றினார்கள். அண்ணா அவர்களின் கொள்கையான ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை விளக்குகிற அளவில் அங்கு ஒலி—ஒளி காட்சி அமைக்க........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் உறுப்பினர் காஞ்சிபுரத்திற்கு போய் வாருங்கள். ஆயிரக்கணக்கான கோவில்கள் என்று ஆரம்பித்தால் என்ன செய்வது ?

கும்பகோணம் அரசு மருத்துவமனை.

*வினா எண் 570—திரு. செ. இராமலிங்கம் : திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் அரசு மருத்துவமனையில் நாய்கடி மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தட்டுப்பாடு நீங்க மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) மே—ஜூலை 1980-ல் சுமார் 2 மாதம் தட்டுப்பாடு ஏற்பட்டது உண்மை ;

(ஆ) நாய்க்கடி மருந்தை குன்னூரிலே உள்ள பாஸ்டர் நிறுவனம் விநியோகித்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி இந்த நிறுவனத்திற்கு கடிதம் எழுதியும், தந்தி கொடுத்தும் அவர்கள் மருந்தை சப்ளை செய்ய

1981 மார்ச் 31]

வில்லை. 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ஆம் நாளன்று நாகப்பட்டினத்திலுள்ள தலைமை மருத்துவ மனையிலிருந்து 300 சி. சி. மருந்து கும்பகோணம் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டு, தட்டுப்பாடு ஓரளவிற்கு சமாளிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் பாஸ்டர் இன்ஸ்ட்டியூட் 3000 சி.சி. சப்ளை செய்துள்ளார்கள். தற்போது இதுபோன்ற எந்த விதமான புகாருக்கும் இடமில்லை.

திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற பொழுது இரண்டு மாத காலமாக அந்த நாய்க்கடி மருந்து தட்டுப்பாடு இருந்தது என்றும், குன்னூரிலே இருக்கக்கூடிய நிறுவனம் மருந்தை அனுப்பாததால் காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். இது கும்பகோணத்தில் மட்டுமல்லாமல், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி போன்ற இடங்களிலும் இந்த நாய்க்கடி மருந்து கிடைக்காததால், நாய் கடித்தவர்கள் வெறியாகி மனிதர்களை கடிக்கிற நெருக்கடி ஏற்பட்டது. எனவே சட்டி சுட்டதடா, கை விட்டதடா என்று இல்லாமல் அரசாங்கமே இப்படிப்பட்ட மருந்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்டடியூர் இன்ஸ்டிடியூட் என்பது குன்னூரில் இருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தாலே நடத்தப்படுகிற ஒரு நிறுவனம். நமக்கு உடனடியாக மருந்து அனுப்பவேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். சில மருத்துவ மனைகளிலிருந்து அந்த மருந்து கொடுத்த பிறகு பணம் அதற்காக கொடுக்கப்படவில்லை என்ற புகாரை வைத்து அவர்கள் தாமதப்படுத்தினார்கள். அப்படி இனி நடக்கக்கூடாது என்றுச் சொல்லி எங்கெங்கு தட்டுப்பாடு இருக்கிறதோ, தலைமை மருத்துவ மனையிலிருந்தே நேரடியாக மருந்து அனுப்பி அந்த நிலைமைகளை சமாளித்து இருக்கிறோம்.

(முற்பகல் 9–40.)

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்வதைப் போல் வெறி நாய் கடித்த மனிதன் வேறு மனிதனைக் கடித்து பெரும் ஆபத்து ஏற்பட இருக்கிறது. இந்த மாதிரி அபாயம் ஏற்படாத வகையில் மருந்தை காலந் தாழ்த்தாது கொடுப்பதிலே அரசு கவனக் குறைவாக இருந்ததுதான் காரணம். இனிமேலாவது அவ்வாறு காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நம் கவனக் குறைவாக இருந்திருக்கும். மாவட்ட மருத்துவ மனையிலிருந்து நாம் அனுப்பாதிருந்தால் Post haste in sending medicine immediately கவனக் குறைவாக இருந்திருக்கும். அந்தச் சூழ்நிலையிருந்தாலும்கூட சமாளித்து கவனக் குறைவு இல்லாமல்—நாய்க்கடியிலே இரண்டு வகைகள் இருக்கின்றன, மேட் டாக் பைட் இருந்தால், ரேபிஷ், அதற்கு மருந்தும், சாதாரணமான நாய் கடித்துவிட்டால் பை வே ஆப் அபன்டன்ட் காஷன் பாதுகாப்புக்காக ஊசி போடுகிறோம். நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பைத்திய நாயாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சாதாரண நாய் கடித்தாலும் அதற்கு 7 ஊசிகள் போடுகிறோம், இதற்கு 14 ஊசிகள் போடுகிறோம். தட்டுப்பாடு இருந்தாலும்கூட உடனடியாக சமாளித்து இருக்கிறோம். அது மட்டுமல்லாமல் நடவடிக்கையையும் எடுத்திருக்கிறோம். By way of abundant caution, a permanent advance of Rs. 1000 ஆயிரம் ரூபாய் மாவட்ட மருத்துவ மனைக்கு முன் கூட்டியே பாஷ்டியூர் இன்ஸ்டியூட்டிற்கு அந்தப் பணத்தைக் கட்டிவிடுங்கள் எந்தவிதமான தாமதமும் ஆகிவிடக்கூடாது என்று அட்வான்ஸாகக் கொடுத்து வைத்திருக்கிறோம். ஆகவே இனிமேல் இப்படிப்பட்ட பிரச்சினைக்கு வாய்ப்பு இல்லை.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்கான தனி வார்டு.

*வினா எண் 571—திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீக்காயங்களுக்காக தனியாக ஏர்கண்டிஷன் வார்டு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக துவங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முசிறி பகுதியிலுள்ள குஷ்டரோகிகள்.

*வினா எண் 572—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி பகுதியில் குஷ்டரோகிகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பது உண்மையா?